**சிலாபம் நகர சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சிலாபம் நகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப் பாதய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 181(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சிலாபம் நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான நிருவாகத்தினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நகர சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆதனங்கள் பொறிகள் உபகரணங்களின் கணக்கின் பிரகாரம் உருப்படிகளின் பெறுமதி மற்றும் புத்தகங்களின் பிரகாரம் பெறுமதி ரூபா 8,174,165 தொகை கூடுதலாகவும் ரூபா 9,214,154 தொகை குறைத்தும் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | இவ்வேறுபாடு ஏற்பட்டமைக்காக தற்போது வெளிப் படுத்தப்பட்ட விடயங்களை பதிவேடொன்று தயாரிக்கப்பட்டு நிதிக் கூற்றுக்கள் மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேடுகளில் உரிய சீராக்கங்களை செய்யப்படுவதாக அறியத் தருகிறேன். | நாட்குறிப்பு பதிவு மூலம் சீராக்கம் செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டுக்காகக் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டண குறை ஒதுக்கீடான ரூபா 470,675 ஆன பெறுமதியை கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 2022 நிதிக்கூற்றுக்கள் மூலம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத்தருகிறேன். | |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நிலுவை வீத வரி அறவிடப்படும் போது அதற்காக அறவிடப்பட்டிருந்த ரூபா 934,678 ஆன தண்டப்பணம், வீத வரி பெறுவனவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வீதவரி அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | அத்தவறினை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். | நாட்குறிப்பில் பதிவுமூலம் சீராக்கி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | எதிர்வரும் ஆண்டுக்குரிய மீளாய்வாண்டில் கிடைத்திருந்த ரூபா 177,505 ஆன வீதவரி பெறுமதி மீளாய்வாண்டின் வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அத்தவறினை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். | |
| (உ) | நகர சபையால் குத்தகை வாடகையை தவிர்ப்புச் செய்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளுக்கு எடுக்கப்பட்ட 6 வழக்குகள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத்தருகிறேன். | குறித்த வெளிப் படுத்தலை சரியாக மேற்கொள்ள வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் செய்யப்பட்ட வேலைகளின் பெறுமதி கணக்கிடப்படாத 03 நிர்மாண வேலைகளுக்குரிய மொத்த உடன்படிக்கைப் பெறுமதியான ரூபா 2,754,675 தொகை நிர்மாண கடன் கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வேலைப் பெறுமதி கடன் கொடுத்தோராக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறியத் தருகிறேன். | சரியான பெறுமதி கடன் கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 12 கணக்கு விடயங்கள் தொடர்பான நிதிக்கூற்றுக்களுடன் அட்டவணைகளின் மீதிகள் மற்றும் கணக்குகளுக்கு இடையே மீதிகளில் ரூபா 12,604,101 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | ஆவணங்களை சரி செய்து சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 30,322,519 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 32,013,571 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 6552 அலகுகளிலிருந்து ரூபா 50,868,578 ஆன வீதவரி அறவிடப்பட வேண்டியிருந்தது. 2022 செப்தெம்பர் 15 ஆம் திகதி வரை அதில் அரச துறைக்குரிய 22 அலகுகளிலிருந்தும் தனியார் துறைக்குரிய 1009 அலகு களிலிருந்தும் ரூபா 6,718,007 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன் தனியார் துறைக்குரிய 759 அலகுகளிலிருந்து ரூபா 7,226,520 தொகையை அறவிடுவதற்கு முடியாததாக இனங்காணப்பட்டது. எஞ்சிய மீதியான அரச துறைக்குரிய 94 அலகுகளிலிருந்தும் தனியார் துறைக்குரிய 4726 அலகு களிலிருந்தும் ரூபா 36,924,051 ஆக இருந்தது. | எதிர்காலத்தில் நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத் தருகிறேன். | நிலுவையயான வீத வரியை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ) வாடகை** | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 132 கடைகளில் இருந்து ரூபா 41,020,728 ஆன நிலுவை கடை வாடகை அறவிடப்பட வேண்டியிருந்தது. 2022 ஆகஸ்ட் 31 இல் உள்ளவாறு அதில் 72 கடைகளில் இருந்து ரூபா 1,114,490 அறவிடப்பட்டு இருந்ததுடன் 41 கடைகளில் இருந்து ரூபா 25,186,548 தொகையை அறவிடுவதற்கு முடியாது இருந்ததாக இனங்காணப்பட்டு இருந்தது. எஞ்சிய மீதியான 19 கடைகளில் இருந்து ரூபா 14,719,690 ஆக இருந்தது. | எதிர்காலத்தின் போது நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத் தருகிறேன். | எஞ்சிய நிலுவை கடை வாடகையை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(இ) ஏனைய வருமானம்** | | |
| மீளாய்வாண்டிற்குரிய மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரிய தனியார் கம்பனியொன்றிடமிருந்து நகர சபைக்கு ரூபா 1,341,015 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. 2022 ஆகஸ்ட் 31 இல் உள்ளவாறு அத்தொகையில் ரூபா 309,365 தொகை அறவிடப்பட்டு இருந்ததுடன் எஞ்சிய மீதி ரூபா 1,031,650 ஆக இருந்தது. | இந்நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நிறுவனங்களுக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளத ாக அறியத் தருகிறேன். | நிலுவை முகாமைத்துவ கட்டண வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |